[24th March 1955

Committee to fix minimum wages of Press Workers.

* 1595 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government have constituted a Tripartite Committee to enquire into the conditions of Press Workers in the State to fix minimum wage?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" No, Sir."

SRI N. K. PALANISAMY :—" சர்க்கார் இம்மாதிரியாக முக்கூட்டுக் கமிட்டியை ஏற்படுத்தி அடிப்படைச் சம்பளம், குறைந்தபட்ச சம்பளம் முதலியவைகளை நிர்ணயிக்க ஏன் முயற்சிக்கக்கூடாதென்று கேட்கிறேன் ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இந்த யோசனையை சர்க்கார் பரிசீலனை செய்தது. இம்மாதிரி பொதுவாக முக்கூட்டுக் கமிட்டியை ஏற்படுத்துவதில் பயன் இல்லை. தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய குறைபாடுகளைப்பற்றியும், அவர்களுடைய கோரிக்கைகளைப்பற்றியும் அவர்களுடைய தொழிற் சங்கங்களை வைத்துக்கொண்டு பேசி விவாதித்து முடிவு காண பார்க்கவும், அது முடியாவிட்டால் அதனை லேபர் ஆபீஸர் மூலம் தொழில் கோர்ட்டையே ஏற்படுத்தி அவர்களுடைய தீர்ப்புக்கு விடுவது என்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது."

New Panchayats for Tindivanam taluk.

* 1596 *Q.*—SRI M. VENUGOPALA GOUNDER: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the steps taken so far to open village panchayat boards in those villages where there are not panchayats in Tindivanam taluk; and

(*b*) whether any proposal made in 1953–54 to open panchayat boards in Tindivanam taluk is still pending with the Government?

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" (*a*) In accordance with the instructions issued by the Government to take up the constitution of new panchayats, after the completion of elections to the existing panchayats and the elections to the district boards, the District Panchayat Officer, South Arcot, is now formulating proposals.

" (*b*) No proposal for the constitution of any new panchayat was received by Government in 1953–54."

SRI M. VENUGOPALA GOUNDER :—" ஆயிரம் ஜனசங்கியையுள்ள கிராமங்கள் தோறும் புது பஞ்சாயத்துத் தேர்தலை நடத்திவிடவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு இருந்தாலும், ஐந்தாறு வருஷ காலமாக பஞ்சாயத்துத் தேர்தலே நடக்காமலிருக்கிறது. பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தவேண்டுமென்று விரும்புகிற கிராமங்களுக்கு மாத்திரமாவது உடனடியாக தேர்தலை நடத்த அரசாங்க்ம் தக்க எற்பாட்டைச் செய்யுமா ? "

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" இப்பொழுது அதையெல்லாம் அரசாங்கம் கவனித்துக்கொண்டிருக்கிறது."